Text Books for Biology.

*208. *Q*.—Thiru M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government propose to publish Text Books for the Elective subject, Biology for Standards X and XI; and

(*b*) if so, the details thereof?

உயிரியலுக்குப் பாட நூல்கள்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 10-வது,11-வது படிவங்களுக்குரிய விருப்பப் பாடமாகிய உயிரியலுக்கு பாட நூல்களை வெளியிட அரசாங்கம் எண்ணுகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) ஆம். 10, 11 வகுப்புகளுக்கான உயிரியல் (விருப்பப் பாடம்) தமிழ்ப் பாடப் புத்தகங்கள் கல்வித்துறை மூலமாக வெளியிடப்படுகின்றன.

(இ) பத்தாம் வகுப்புக்கான உயிரியல் (விருப்பப் பாடம்) தமிழ்ப் பாடப் புத்தகம் வெளியிடப்பட்டு கடந்த (1967–68) விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 11-ம் வகுப்புக்கான உயிரியல் பாடப் புத்தகமும் இந்த ஆண்டில் (1968–69) வெளியிடப்பட்டு விற்பனைக்கு அனுப்பி வைக்கப் பட்டன.

Family Pension Applications.

*209. Q.—Thiru M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:—

(*a*) the number of applications for family pension from widows of deceased teachers pending in the office of the District Educational Officer, Mayuram as on 1–8–1968; and

(*b*) the reasons therefor?

குடும்ப ஓய்வூதிய மனுக்கள்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இறந்துபோன ஆசிரியர்களின் மனைவியரிடமிருந்து குடும்ப ஓய்வூதியம் கோரி வந்த மனுக்களில் எத்தனை மனுக்கள் மாயூரம் மாவட்டக் கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் 1—8—1968 வரையில் முடிவு செய்யப் படாமல் உள்ளன ?

(இ) அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இரண்டு.

(இ) ஒரு தேர்வில் குடும்ப ஓய்வூதியம் அளித்து எற்கனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மற்றொரு தேர்வில் கடலூர், மதுரைத் தலைமைக் கல்வி அதிகாரிகளிடமிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியம் பெறுவதற்கு எத்தனை வருஷம் வேலை அனுபவம் இருக்கவேண்டும் ?